# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,725 — 1966 දෙසැම්බර් 9 වැනි සිකුරාදා — 1966.12.9

14,725 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 351 |
| பதவிகள்—வெற்றிடம் | 359 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 362 |
| துணை விதிகள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| வரவு செலவுத் திட்டங்கள் | — |
| ஆதன விற்பனைகள் | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| நானாவித அறிவித்தல்கள் | 362 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச.வ—பீ 67/36

### கிண்ணியாப் பட்டினசபை

பொது அரங்காட்டுகள்—கட்டளைச்சட்டம்

(176 ம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

கொழும்பு,
1966 ம் ஆண்டு நவம்பர் மீ 14 ந் உ.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

#### விதி

1943, ஏப்ரல் 9 ன் 9,108 ம் இலக்க கசெற்றில் பிரசுரமான விதியினால் திருத்தப்பட்டபடியான (176 ம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவிற்கிணங்க ஆக்கப்பட்டு 1919, ஏப்ரல் 4 ன் 7,004 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள், கிண்ணியாப் பட்டின சபையின் நிர்வாக எல்லைக்குள் அடங்கிய பிரதேசத்துடன் அவை சம்பந்தப்பட்ட அளவுக்கு அவற்றின் 3 அ ஆகிய விதியில் விவரிக்கப்பட்டுள்ள கட்டணப்படிக் கிரமத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய படிக்கிரமத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | ஒரு நாளைக்கு | ஒரு மாதத்துக்கு | ஒரு வருடத்துக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இருக்கை வசதி செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு மேற்படாதிருப்பின் .. | 5 00 .. | 50 00 .. | 150 00 |
| இருக்கை வசதி செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு அதிகமாகவும் ஆனால் 399 க்கு மேற்படாமலுமிருப்பின் .. | 7 50 .. | 75 00 .. | 250 00 |
| இருக்கை வசதி செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 399 க்கு மேற்படுமாயின் .. | 10 00 .. | 100 00 .. | 300 00 |

12–554—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.

பேர்னாட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

எல். டி—பி. 9/64(63)

எல். ஜி. டி. ஜி. சி. 15/2/3

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5, 10 ஆகிய பிரிவுகளினால் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் இடப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 28.11.1966.

### கட்டளை

வடமேற்கு மாகாணம், புத்தளம் மாவட்டத்திலுள்ள தெமலகத்பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவினைச் சேர்ந்த ஆண்டிகமைக் கிராமப் பிரதேசத்தை அமைப்பது பற்றி (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5, 10 ஆகிய பிரிவுகளுக்கமைவாக இடப்பட்டு 1964, ஜூலை 15 ன் 14,106 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப் பட்ட கட்டளை, அதன் (1), (2) ஆகிய பந்திகளில் உள்ள "ஆண்டிகமைக் கிராமப் பிரதேசம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "குமாரப்பள்ளம் பற்றுக்கிராமப் பிரதேசம்" என்ற சொற்றொடரைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

12-614—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

---

## களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவுக்கமைவாக மாத்தளை மாவட்டத்திலுள்ள உடுகொடை உடசியப்பற்று மேற்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் நிறைவேற்றப் பட்ட பின்வரும் தீர்மானம், உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகிறது.

### தீர்மானம்

"சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடைபெறும் (கட்டளைச் சட்டத்தில் வரையறைசெய்யப்பட்ட) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்களின்மீது இதன் கீழ் விவரிக்கப்பட்டிருக்கும் விகிதமான ஒரு வரியை, இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரமாகும் திகதியிலிருந்து (267 ம் அத்தியாயமாம்) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இச்சபை இத்தால் விதித்து அறவிடுகிறது.

கட்டணங்களின் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கான கட்டணம்—

| | வரிவிகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருப்பின் | .05 |
| (ஆ) 50 சதத்துக்கு அதிகமாகவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் | .10 |
| (இ) 1 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 1.50 வுக்கு மேற்படாமலுமிருப்பின் | .15 |
| (ஈ) 1.50 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் | .20 |
| (உ) 2 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் | .30 |
| (ஊ) 3 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 4 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் | .40 |
| (எ) 4 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் | .50 |
| (ஏ) 5 ரூபாவுக்கு அதிகமாகவும் ஆனால் 10 ரூபாவுக்கு மேற்படாமலுமிருப்பின் ... ... | 1. 00 |
| (ஐ) 10 ரூபாவுக்கு மேற்படின் — | |
| (அ) முதல் 10 ரூபாவுக்கு | 1. 00 |
| (ஆ) மேலதிகமான ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பாகத்துக்கும் ... ... | 1. 00" |

டப்ளிவ். ஜே. பொன்னுந்து,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 22.11.1966.

12-578—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

---

ச. வ. பீ. 31/47

LGD/GF/GD/11/1/12

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சியமைச்சரா லிடப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சியமைச்சர்.

கொழும்பு, 30.11.1966.

### கட்டளை

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுடத்தனைக் கிராமப் பிரதேசஞ் சம்பந்தமாக, (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் :

(1) 1967, ஜூலை முதலாம் நாளுக்கு முன் நடைபெறவிருக்கும் முன்னே சொல்லப்பட்டுள்ள கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் அங்கத்தவர்களின் பொதுத் தேர்தலுடன் தொடர்பான ஏதேனுங் காரியத்துடன் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்ட அளவுக்கு, இக் கட்டளை கசெற்றிற் பிரசுரிக்கப்படுந் தேதியில் நடைமுறைக்கு வரும் ; அத்துடன்

(2) வேறேதேனுங் காரியத்துடன் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்ட அளவுக்கு, இதன் தேதியில் பதவியிலிருக்கும் முன்னே சொல்லப்பட்டுள்ள கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடையுந் தேதிக்கு நேரே பிந்திய நாளில் நடைமுறைக்கு வரும்.

12-583/1—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

LGD/GF/GD 11/1/62

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் இவ்வறிவித்தல் மூலம் :

(1) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சிப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவைச் சேர்ந்த குடத்தனைக் கிராமப் பிரதேசத்திலமைந்துள்ளதும் இதன்கண்ணுள்ள அட்டவணையின் I ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளதுமான, கிராம சேவகர் பிரிவுகளொவ்வொன்றையும் அவ்வட்டவணையின் II ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எல்லைகளையுடைய வட்டாரங்களாகப் பிரித்து ;

(2) வடமாகாணத்திலுள்ள சில கிராமப் பிரதேசங்களின் கிராம சேவகர்கள் பிரிவுகளை வட்டாரங்களாகப் பிரிப்பது அல்லது ஒருங்கிணைப்பதுபற்றி 1941, மே 23 ன் 8,748 ம் இலக்க கசெற்றில் பிரசுரமான அறிவித்தலை அவ்வறிவித்தல் குடத்தனைக் கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் நீக்கஞ் செய்வதுடன் ;

(3) (1) ம், (2) ம் பந்திகளின் ஏற்பாடுகள்—

(அ) 1967 ஜூலை முதற் தினத்துக்கு முன்னர் நடாத்தப்படவேண்டிய முன்சொல்லப்பட்ட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் அங்கத்தவர்களின் பொதுத் தேர்தலோடு தொடர்பான விஷயமெதனோடும் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில், (262 ம் அத்தியாயமாம்) உள்ளூரதிகாரத்தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ம் பிரிவின்படி முன் சொல்லப்பட்ட கிராமப் பிரதேசம் சம்பந்தமாக இடப்பட்ட கட்டளை கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியன்று நடைமுறைக்கு வரவேண்டுமெனவும் ;

(ஆ) அவ்வேற்பாடுகள் வேறு விஷயம் எதனுடனும் சம்பந்தப்பட்டவரையில் இதன் திகதியில் பதவிவகிக்கும் முன் சொல்லப்பட்ட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் அங்கத்தவர்களின் பதவிக்காலம் முடிவடையுந் திகதியை நேரடுத்த திகதியன்று நடைமுறைக்கு வரும் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சியமைச்சர்.

கொழும்பு, 30.11.1966.

### அட்டவணை

| பத்தி I<br>கிராம சேவகர் பிரிவு | பத்தி II<br>வட்டாரங்கள் |
|---|---|
| குடத்தனை கரையூர் | வட்டாரம் இல. 1—குடத்தனை கரையூர் கிழக்கு<br>எல்லைகள் :—<br>வடக்கு : கடற்கரையினால் ;<br>கிழக்கு : ஏகப்பள்ளம் வாய்க்காலினால் ;<br>தெற்கு : மளிகைத்திடல் அம்மன் கோயில் வீதியினால் ;<br>மேற்கு : குடத்தனை கரையூர் மீன் பிடித் துறை வீதியினால். |
| குடத்தனை கரையூர்—(தொடர்) | வட்டாரம் இல. 2—குடத்தனை கரையூர் மேற்கு<br>எல்லைகள் :—<br>வடக்கு : கடற்கரையினால் ;<br>கிழக்கு : குடத்தனை கரையூர் மீன் பிடித் துறை வீதியினால் ;<br>தெற்கு : பனைநின்றான்காடு வீதியினால் ;<br>மேற்கு : மேய்ச்சற்றரையினால். |
| | வட்டாரம் இல. 3—மணல்காடு<br>எல்லைகள் :—<br>வடக்கு : கடற்கரையினால் ;<br>கிழக்கு : மேய்ச்சற்றரையினால் ;<br>தெற்கு : மடத்துவாசல் ஒழுங்கையினால் ;<br>மேற்கு : கட்டையடிப்பாடு ஒழுங்கையினால். |
| அம்பன் | வட்டாரம் இல. 4—விளாங்காடு<br>எல்லைகள் :—<br>வடக்கு : மடத்துவாசல் ஒழுங்கையினால் ;<br>கிழக்கு : மடத்துவாசல் ஒழுங்கையினால் ;<br>தெற்கு : காளி ஆற்றினால் ;<br>மேற்கு : மாவக்கேணி வாய்க்காலினால். |
| | வட்டாரம் இல. 5—கூளன்<br>எல்லைகள் :—<br>வடக்கு : பனைநின்றான் வீதியினால் ;<br>கிழக்கு : அம்பன் கிராம எல்லையினால் ;<br>தெற்கு : காளி ஆற்றினால் ;<br>மேற்கு : மடத்துவாசல் ஒழுங்கையினால். |
| | வட்டாரம் இல. 6—அம்பன் மேற்கு<br>எல்லைகள் :—<br>வடக்கு : கடற்கரையினால் ;<br>கிழக்கு : பெரியம்பன் ஒழுங்கையினால் ;<br>தெற்கு : காளி ஆற்றினால் ;<br>மேற்கு : அம்பன் கிராம எல்லையினால். |
| | வட்டாரம் இல. 7—அம்பன் கிழக்கு<br>எல்லைகள் :—<br>வடக்கு : கடற்கரையினால் ;<br>கிழக்கு : அம்பன்கொட்டோடை வீதியினால் ;<br>தெற்கு : காளி ஆற்றினால் ;<br>மேற்கு : பெரியம்பன் ஒழுங்கையினால். |

| கிராம சேவகர் பிரிவு | வட்டாரங்கள் |
|---|---|

வட்டாரம் இல. 8—நாகர்கோயில் தரவை

எல்லைகள் :—

வடக்கு : நாகர்கோயில் அம்மன் கோயில் ஒழுங்கையினுல் ;

கிழக்கு : முருகையன் கோயில் வீதியினுல் ;

தெற்கு : காளி ஆற்றினுல் ;

மேற்கு : அம்பன் கொட்டோடை வீதியினுல்.

வட்டாரம் இல. 9—நாகர்கோயில் மேற்குறுடு

எல்லைகள் :—

வடக்கு : கடற்கரையினுல் ;

கிழக்கு : நாகர்கோயில் கரையூர் மீன்பிடித்துறை வீதியினுல் ;

தெற்கு : நாகர்கோயில் அம்மன் கோவில் ஒழுங்கையினுல் ;

மேற்கு : அம்பன் கொட்டோடை வீதியினுல்.

வட்டாரம் இல. 10—நாகர்கோயில் கிழக்குறுடு.

எல்லைகள் :—

வடக்கு : கடற்கரையினுல் ;

கிழக்கு : குடாரப்பு கிராம எல்லை ஒழுங்கையினுல் ;

தெற்கு : நாகர்கோயில் அம்மன் கோயில் வீதியினுல் ;

மேற்கு : நாகர்கோயில் கரையூர் மீன்பிடித்துறை வீதியினுல்.

வட்டாரம் இல. 11—குடாரப்பு

எல்லைகள் :—

வடக்கு : கடற்கரையினுல் ;

கிழக்கு : செம்பியன்பற்றுக் கிராம எல்லை ஒழுங்கையினுல் ;

தெற்கு : காளி ஆற்றினுல் ;

மேற்கு : குடாரப்பு கிராம எல்லை ஒழுங்கையினுல்.

12-583/2—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

---

எல். ஜீ. டீ. ஜீ.எப். ஜீ டீ/10/1/14

## பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 2 ஆம், 5 ஆம், 6 ஆம், 9 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 5 ஆம், 6 ஆம், 9 ஆம் பிரிவுகளின் கீழ் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு உள்ளூர் ஆட்சி அமைச்சரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

எம். திருச்செல்வம்,
உள்ளூர் ஆட்சி அமைச்சர்.

கொழும்பு, 25 நொவெம்பர், 1966.

### கட்டளை

1. இதற்குள்ள முதலாவது அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள பிரதேசம், இதன் பின்னுல் "கட்டளைச்சட்டம்" என அழைக்கப்படும், (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பட்டினமொன்ருகவிருத்தல் வேண்டும். அப்பட்டினத்தின் நிர்வாக எல்லைகள், அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள எல்லைகளாகவிருத்தல் வேண்டும்.

2. மேலே சொல்லப்பட்ட பட்டணத்திற்குக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கும் பட்டின சபையின் பெயரும் பதவியும் பின்வருமாருகவிருத்தல் வேண்டும் :—

"உரும்பிராய்ப் பட்டின சபை"

3. உரும்பிராய்ப் பட்டின சபை அடக்கியிருக்கவேண்டிய அங்கத்தவர்களின் எண் எட்டாகவிருத்தல் வேண்டும்.

4. உரும்பிராய்ப் பட்டணசபை அதற்கு அமைக்கப்படவிருக்கும் பட்டினம் இதற்குள்ள இரண்டாவது அட்டவணையில் வரையறுக்கப்பட்டபடி எட்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

5. உரும்பிராய்ப் பட்டின சபையின் பதவிக்காலம் ஆரம்பமாகுந் திகதி 1967 ஆம் ஆண்டு, யூலை மாதம் 1 ஆம் திகதியாகும்.

### முதலாம் அட்டவணை

### உரும்பிராய்ப் பட்டினத்தின் எல்லைகள்

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வலிகாமம் கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள (83 ம் இலக்கக் கிராம சேவகர் பிரிவான) ஊரெழு (84 ம் இலக்கக் கிராம சேவகர் பிரிவான) உரும்பிராய் ஆகிய கிராமங்களின் பகுதிகளுக்குள்ளிருப்பதும் பின்வருமாறு எல்லைப் படுத்தப்பட்டதுமான நிலப்பரப்பு முழுவதும் :—

வடக்கு : சுன்னுகம் பட்டின சபையின் கிழக்கு எல்லை சுன்னுகம்-புத்தூர் கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும் இடத்திலிருந்து கிழக்காகவும், வடகிழக்காகவும் சொல்லப்பட்ட கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியைச் சந்திக்கும் சந்தியின் மத்திக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினுலும் ;

கிழக்கு : இறுதியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கி யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியின் ஓரமாக அது விளாங்கன் ஒழுங்கையைச் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் வழியே அது சி. சின்னத்துரையினது காணியின் வடஎல்லையின் வடமேற்குப்புற நீட்சியைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வடஎல்லை ஓரமாக விளாங்கன் சுடலையின் மேற்குப் புற எல்லைக்கும் ; அங்கிருந்து தென் மேற்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக விளாங்கன் சுடலையின் தென்னெல்லையின் மேற்கு அந்தம் வரைக்கும் ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி விளாங்கன் சுடலையின் தென்னெல்லை ஓரமாக அதன் கிழக்கந்தம் வரைக்கும் ; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சி. சின்னத்துரையினது காணியின் கிழக்கெல்லை ஓரமாக சொல்லப்பட்ட காணியின் தென்

னெல்லையின் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாக கே. நாகலிங்கத்தினது காணியின் கிழக்கெல்லை வரைக்கும்; அங்கிருந்து தென் மேற்கு நோக்கி இறுதியாகச் சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லையின் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாக எஸ். தம்பித்துரை, கே. வைத்திலிங்கம் ஆகியோரதும் ஏனையோரதும் காணியின் கிழக்கெல்லை வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாக டி. தம்பித்துரையினது காணியின் வட எல்லை வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வட எல்லை ஓரமாக அதன் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாக எஸ். செல்லப்பாவினது காணியின் வட எல்லை வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வட எல்லை ஓரமாக அதன் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி என். சங்கரப்பிள்ளை, ஏ. திருமேனி, எஸ். ஆபிரகாம், எஸ். அருளானந்தன், எஸ். செல்வரெத்தினம், வி. விசுவாசம் ஆகியோரது காணியின் வட எல்லை ஓரமாக அதன் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லையினதும் அதன் நீட்சியினதும் ஓரமாக கரந்தன்-அச்சுவேலி வீதியின் மத்தியகோடு வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கியும், வடகிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது வைத்திலிங்கத்தினது காணியின் வட கீழ் எல்லையின் வட மேற்கு நோக்கிய நீட்சியைச் சந்திக்கும் வரைக்கும் அங்கிருந்து தென் கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வடகிழக்கு எல்லை ஓரமாகவும் தெற்கு நோக்கி அதன் கிழக்கெல்லை ஓரமாகவும் அது கே. பூபாலசிங்கத்தினது காணியின் வட எல்லையிலிருக்கும் ஒழுங்கையின் மேற்குப்புற நீட்சியைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட நீட்சியின் ஓரமாகவும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் வட மருங்கின் ஓரமாகவும் சொல்லப்பட்ட காணியின் கிழக்கு எல்லைக்கு நேராக வடக்கு நோக்கி வரையப்பட்ட ஒரு கோட்டைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாகவும் மேற்கு நோக்கி அதன் தென்னெல்லை ஓரமாகவும் டி. பொன்னம்பலத்தினது காணியின் கிழக்கெல்லை வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாகவும் அதன் நீட்சியின் ஓரமாகவும் கரந்தன்-நீர்வேலி கட்டுவேலைப்பகுதி வீதியின் மத்திய கோடு வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக எஸ். துரையப்பாவினது காணியின் தென்னெல்லையிலிருக்கும் ஒழுங்கையை அது சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக வி. கந்தசாமியினது காணியின் வட எல்லை வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி பூதவராஜர் கோயில் வீதியின் வடகீழ் மூலைக்கு வரையப்பட்ட ஒரு நேர்கோட்டினாலும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் கீழ் மருங்கின் ஓரமாக உரும்பிராய்-கோப்பாய் கிராம எல்லை வரைக்கும்; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட கிராம எல்லையின் ஓரமாக என். காசியனது விதவையான இலட்சுமியினது காணியின் கிழக்கெல்லையின் வட அந்தம் வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கு எல்லையோரமாகவும் அதன் நீட்சியின் ஓரமாகவும் மானிப்பாய்-கைதடி கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோடு வரைக்கும்; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது உரும்பிராய்-கோப்பாய் கிராம எல்லையைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி உரும்பிராய்-கோப்பாய் கிராம எல்லையின் ஓரமாக இளங்காட்டுச் சுடலையின் வட எல்லையின் ஓரமாக கிழக்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து தென் மேற்கு நோக்கி சொல்லப்பட்ட சுடலையின் கிழக்கெல்லையோரமாக அதன் தென்னந்தம் வரைக்கும்; அங்கிருந்து தென் மேற்கு நோக்கி கோப்பாய்த் தொகுதிப் பண்ணையின் வட எல்லையின் கிழக்கந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு நேர்கோட்டினாலும்;

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கி கோப்பாய்த் தொகுதிப் பண்ணையின் வடகிழக்கெல்லையின் ஓரமாகவும் தென் மேற்கு நோக்கி வடமேற்கு எல்லையின் ஓரமாகவும் உரும்பிராய்க்கும் கோப்பாயின் வடக்குக்கு இடையிலான கிராம எல்லையின் ஓரமாகவும் அது வட கோப்பாய்க்கும் தென் கோப்பாய்க்கும் இடையிலான கிராம எல்லையைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து தென் மேற்கு நோக்கி உரும்பிராய்க்கும் தென் கோப்பாய்க்கும் இடையிலான கிராம எல்லையின் ஓரமாக அது உரும்பிராய்க்கும்—கோண்டாவிலுக்கும் இடையிலான கிராம எல்லையைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து வட மேற்கு நோக்கி கடைசியாகச் சொல்லப்பட்ட கிராம எல்லையின் ஓரமாக அது சோடன் சுடலையின் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் சொல்லப்பட்ட சுடலையின் கிழக்கு, வடக்கு, மேற்கு எல்லைகளின் ஓரமாக அது யாழ்ப்பாணம்-பலாலி வீதியிலிருந்து சுடலைக்குப்போகும் வீதியின் வட மருங்கைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் வட எல்லை ஓரமாக சுடலைக்கும் யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதி மத்தியகோடு வரைக்குமான அதன் நீட்சிக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது டாக்டர் எஸ். சரணபாலசூரியாது காணியின் தென்னெல்லையின் தென்கிழக்கு நோக்கிய நீட்சியைச் சந்திக்கும் வரைக்கும்; அங்கிருந்து வட மேற்கு நோக்கி சொல்லப்பட்ட நீட்சியின் ஓரமாகவும் டாக்டர் எஸ். சரணபாலசூரியாதும் கே. தர்மலிங்கத்தினதும் காணிகளின் தென்னெல்லை ஓரமாகவும் இறுதியாகச் சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லையின் மேற்கு அந்தம் வரைக்கும்; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் மேற்கு எல்லை ஓரமாக கே. சின்னத்துரையினது காணியின் வட எல்லையின் கிழக்கந்தத்துக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வட எல்லையின் ஓரமாக பி. இராஜரத்தினத்தினதும் ஏனையவர்களினதும் காணியின் கிழக்கெல்லையின் தென்னந்தத்துக்கும்; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட கிழக்கு எல்லையின் ஓரமாக வேலுப்பிள்ளையினது காணியின் தென்னெல்லையி

லுள்ள ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கும்; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்தியகோட்டின் ஓரமாக ஏ. நாகலிங்கத்தினது காணியின் கிழக்கெல்லையின் வட அந்தத்துக்கு; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி ஏ. நாகலிங்கம், டி. தங்கராஜா, கே. சிவராஜா, ஏ. இராசையா ஆகியோரது காணிகளின் கிழக்கெல்லை ஓரமாக ஏ. இராசையாவினது காணியின் தென்னெல்லையிலுள்ள ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கு; அங்கிருந்து வடமேற்கு நோக்கி ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக எஸ். சிவபாக்கியத்தினது காணியின் கிழக்செல்லையிலிருக்கும் சிற்றொழுங்கையை அது சந்திக்கும் சந்தியின் மத்திய கோடு வரைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி ஏ. பொன்னையாவினது காணியின் மேற்கெல்லையிலுள்ள சிற்றொழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லையின் நீட்சியாக வரையப்பட்ட ஒரு கோட்டுக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட நீட்சியின் ஓரமாகவும் ஏ. பொன்னையா, வி. நல்லதம்பி, கே. பொன்னையா ஆகியோரது காணிகளின் தென்னெல்லை ஓரமாகவும் ஏ. செல்லையாவினது காணியின் கிழக்கெல்லைக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாக சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லையின் கிழக்கந்தத்துக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாகவும் பூதராயன் கோயில் வீதியின் தென் மருங்கின் ஓரமாகவும் எம். ஆறுமுகத்தினது காணியின் தென்னெல்லையின் கிழக்கு அந்தத்துக்கும், அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் ஓரமாக அணங்கை-உரும்பிராய் கட்டுவேலைப் பகுதி வீதியைக் கடந்து எஸ். செல்லையாவினது காணியின் தென்னெல்லையின் கிழக்கந்தத்துக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி எஸ். செல்லையாவுக்கும் என். சீனியனுக்கும் ஏனையோருக்கும் இன்னும் எஸ். குணனுக்கும் சொந்தமான காணிகளின் தென்னெல்லை ஓரமாக எஸ். குணனுடைய காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கி அவ்வொழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக எஸ். தம்பிப்பிள்ளையினதும் ஏனையோரதும் காணியின் வட எல்லையின் நீட்சியாக வரையப்பட்ட ஒரு கோட்டினுலும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட நீட்சியின் ஓரமாகவும் சொல்லப்பட்ட காணியின் வட எல்லையின் ஓரமாகவும் சொல்லப்பட்ட காணியின் மேற்கு எல்லையின் வட அந்தத்துக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் மேற்கெல்லை ஓரமாக வீ. சீனியனுடைய காணியின் மேற்கெல்லையிலிருக்கும் ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினுலும்;

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் வீ. சீனியனது காணியின் மேற்கெல்லையிலிருக்கும் ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக எம். சின்னப்புவினதும் ஏனையோரதும் காணியின் தெற்கு, கிழக்கு எல்லைகளிலுள்ள "நடைவரம்பு" க்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் (மாட்டுச் சூத்திரக்கிணற்றின் தெற்கிலுள்ள) தென்னெல்லை ஓரமாக அதன் மேற்கு அந்தத்துக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் மேற்கெல்லை ஓரமாக அதன் வட அந்தத்துக்கும்; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி கருணைகரப் பிள்ளையார் கோயில் வீதியின் மேற்கெல்லையின் தென்னந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு நேர் கோட்டினுலும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மேற்கெல்லை ஓரமாக கோயிலின் வட எல்லையிலுள்ள ஒழுங்கையைக் கடந்து சபாரத்தினக்குருக்களினது காணியின் மேற்கெல்லையின் தென்னந்தத்துக்கும்; அங்கிருந்து வடமேற்கு நோக்கி கே. அரியகுட்டி, வி. நாகலிங்கம், கே. நடராஜா, எஸ். பொன்னுத்துரை, எஸ். கனகர், வி. செல்லர், வி. செல்லத்துரை ஆகியோரதும் கே. செல்லத்துரையினதும் கே. இராசரத்தினத்தினதும் ஏனையோரதும் காணிகளின் மேற்கெல்லையின் ஓரமாக எ. மயில்வாகனத்தினது காணியின் வட எல்லை வரைக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வட எல்லை ஓரமாகவும், அக்காணியின் மேற்கெல்லையிலிருக்கும் ஒழுங்கையின் மத்திய கோடு வரைக்குமான அதன் நீட்சிக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது மானிப்பாய்-கைதடி கட்டுவேலைப் பகுதி வீதியைச் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும்; அங்கிருந்து ஒருநேர் கோட்டினுல் வீ. செல்லத்துரையினது காணியின் மேற்கெல்லையின் தென்னந்தத்துக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி வி. செல்லத்துரை, எஸ். மயில்வாகனம் ஆகியோரதும் ஏனையோரதும் சிவசம்பு எஸ். அழகரெத்தினம், என். மாரிமுத்து, எஸ். நாகலிங்கம், டி. நடராஜா, எஸ். சின்னத்தம்பி, எம். விஜயராஜா, சுப்பிரமணியத்தின் விதவையான தங்கம்மா, வி. செல்லப்பா, எஸ். மாணிக்கவாசகர், கே. சுப்பையா, வி. சுப்பையா ஆகியோரதும் காணிகளின் மேற்கெல்லை ஓரமாகவும் எஸ். ஆனந்தனதும் ஏனையோரதும் காணியின் கிழக்கெல்லை ஓரமாகவும் ஏ. தனபாலசிங்கத்தினது காணியின் மேற்கெல்லையின் தென்னந்தம் வரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக சொல்லப்பட்ட காணியின் வட எல்லையின் மேற்கந்தம் வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் வட எல்லை ஓரமாக பனந்தோட்டத்தின் கிழக்கிலுள்ள வீதி ஒதுக்கு நிலத்துக்கும்; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட மத்திய வீதி ஒதுக்கு நிலத்தின் ஓரமாகவும், வண்டிப் பாதையின் மத்திய கோட்டின் ஓரமாகவும் எஸ். பெருமாளினது காணியின் தென்னெல்லைக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாக சொல்லப்பட்ட காணியின் மேற்கெல்லையின் தென்னந்தத்துக்கும் அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் மேற்கெல்லை ஓரமாக அதன் வட அந்தம் வரைக்கும்; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி வரையப்பட்ட ஒரு நேர்கோட்டினுல் கதியாலடிச்சுடலையின் கிழக்கெல்லையின் தென்னந்தத்துக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் மீண்டு வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட சுடலையின் கிழக்கு எல்லை ஓரமாக பிரதேசத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினுலும்:

## இரண்டாம் அட்டவணை

### உரும்பிராய்ப் பட்டினத்தின் வட்டாரங்களின் எல்லைகள்

### 1 ம் வட்டாரம்—ஞானவைரவர்

வடக்கு: யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதி கிருஸ்தவக் கோயில் வீதியைச் சந்திக்கும் சந்தியின் மத்தியிலிருந்து தென் கிழக்கு நோக்கி கிருஸ்தவக் கோயில் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக

அது ஞானவைரவர் கோயில் வீதியுடன் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி ஞானவைரவர் கோயில் வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது காட்டுபுலம் ஒழுங்கையைச் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது சிற்றொழுங்கையைச் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் சிற்றொழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக ஈ. இராசையாவினதும் ஏனையோரதும் காணியின் தென்னெல்லையிலிருந்து மேற்குப் புறமாக நீட்டப்பட்ட ஒரு கோட்டுக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட கோட்டின் ஓரமாகவும் சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாகவும் பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்குப்புற எல்லைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்குப்புற எல்லையின் ஓரமாக அதன் தென் அந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கியும், தென்மேற்கு நோக்கியும் மீண்டும் வடமேற்கு நோக்கியும் பட்டின சபைப் பிரதேசத்தின் தென்னெல்லை ஓரமாக யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப்பகுதி வீதியின் மத்திய கோட்டுக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடகிழக்கு நோக்கி யாழ்ப்பாணம்-பலாலி கட்டு வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வடப்புற எல்லையின் தொடக்க இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

### இரண்டாம் வட்டாரம்—காட்டுவைரவர்

வடக்கு: யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியினதும் காட்டு வைரவர் கோயில் ஒழுங்கையினதும் சந்தியின் மத்தியிலிருந்து கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாகவும் கே. தம்பையாவினது காணியின் வட எல்லையில் உள்ள ஒழுங்கை ஓரமாகவும் சி. சபாரத்தினத்தினது மேற்கெல்லையின் வட அந்தத்துக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் மேற்கெல்லை ஓரமாக சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லையில் மேற்கு அந்தத்துக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாக அம்பலவாணர் இரத்தினசபாபதியினது காணியின் தென்னெல்லையின் மேற்கந்தத்துக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் தென்னெல்லை ஓரமாக ஏ. பொன்னுத்துரையினது வட எல்லையின் மேற்கந்தத்துக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லையின் வட அந்தத்துக்கும்; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக சாதப்புலம் ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கும்; அங்கிருந்து கிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது புதுச்சுடலை ஒழுங்கையைச் சந்திக்கும் சந்தியின் மத்திக்கும்; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி இறுதியாகச் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாகவும் பயிரிடப்பட்ட நிலங்களின் ஓரமாகவும் ஈ. இராசையாவினதும் ஏனையோரதும் காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கு நேராக வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி ஈ. இராசையாவினதும் ஏனையோரதும் காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையின் மத்திய கோட்டின் வடப்புற நீட்சியின் ஓரமாக அது 1ம் வட்டாரத்தின் வட எல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் மீண்டும் மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் வடமேற்கு நோக்கியும் 1 ம் வட்டாரத்தின் வட எல்லை ஓரமாக அதன் மேற்கந்தம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

### 3 ம் வட்டாரம்—கரந்தன்

வடக்கு: ஊரெழுக் கிராமத்தின் தென்னெல்லை யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும் இடத்திலிருந்து தென் கிழக்கு நோக்கியும், வடகிழக்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட கிராமத்தின் தென்னெல்லை ஓரமாக அது பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்கெல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கியும் தென்மேற்கு நோக்கியும் பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்கெல்லை ஓரமாக 1ம் வட்டாரத்தின் வட எல்லையின் கிழக்கந்தம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் 1 ம் வட்டாரத்தின் வட எல்லையின் ஓரமாக 2 ம் வட்டாரத்தின் கிழக்கெல்லையின் தென்னந்தம் வரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட கிழக்கெல்லையின் ஓரமாக 2 ம் வட்டாரத்தின் வட எல்லையின் கிழக்கந்தத்துக்கும்; அங்கிருந்து மேற்கு நோக்கியும் தென்மேற்கு நோக்கியும் வட மேற்கு நோக்கியும் 2 ம் வட்டாரத்தின் வட எல்லை ஓரமாக அதன் மேற்கந்தத்துக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி யாழ்ப்பாணம்-பலாலி கட்டு வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

### 4 ம் வட்டாரம்—உரும்பிராய் தெற்கு

வடக்கு: பட்டின சபைப் பிரதேசத்தின் மேற்கெல்லை மானிப்பாய்-கைதடி கட்டு வேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும் ஒரு இடத்திலிருந்து தென் கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக யாழ்ப்பாணம்-பலாலி கட்டு வேலைப் பகுதி வீதியுடன் அது சந்திக்

கும் சந்தியின் மத்தி வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கி 1 ம் வட்டாரத்தின் மேற்கெல்லை ஓரமாக அதன் தென்னந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கி பட்டின சபைப் பிரதேசத்தின் தென்னெல்லை ஓரமாக அதன் மேற்கந்தம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கியும் வடமேற்கு நோக்கியும் பட்டின சபைப் பிரதேசத்தின் மேற்கெல்லை ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

### 5 ம் வட்டாரம்—கற்பகப்பிள்ளையார்

வடக்கு : என். கந்தசாமியினது காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையின் மத்திய கோடு ஊரெழுக் கிராமத்தின் தென்னெல்லையைச் சந்திக்கும் ஒரு இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட கிராமத்தின் தென்னெல்லை ஓரமாக அது 3 ம் வட்டாரத்தின் மேற்கெல்லையின் வட அந்தத்தைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென் மேற்கு நோக்கி 3 ம், 2 ம், 1 ம் வட்டாரங்களின் மேற்கெல்லைகளின் ஓரமாக 4 ம் வட்டாரத்தின் வட எல்லையின் கிழக்கந்தம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி 4 ம் வட்டாரத்தின் வட எல்லை ஓரமாக அது நிணல்வாடி ஒழுங்கையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வட கிழக்கு நோக்கி நிணல்வாடியின் மத்திய கோட்டின் ஓரமாக கே. பாக்கியத்தினது காணியின் வட எல்லையிலுள்ள பறையக்கடவை ஒழுங்கையுடன் அது சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து வடமேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் ஓரமாக டி. சின்னத்துரையினது காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையுடன் அது சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக எம். சின்னப்புவினது காணியின் கிழக்கெல்லையின் தென்னந்தத்துக்கும் ; அங்கிருந்து வட கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணியின் கிழக்கெல்லை ஓரமாக அதன் வட அந்தம் வரைக்கும் ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி எம். சின்னப்பு, என். மாணிக்கம், கே. சண்முகம், கே. சின்னத்தம்பி, கே. முத்து, கே. கந்தையா ஆகியோரது காணிகளின் வட எல்லை ஓரமாகவும், அதன் வடமேற்குப் புற நீட்சி ஓரமாகவும் வன்னக்கடவை ஒழுங்கையின் மத்திய கோட்டுக்கும் ; அங்கிருந்து வட கிழக்கு நோக்கியும், தென்கிழக்கு நோக்கியும் மீண்டும் வடகிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது கற்பகப் பிள்ளையாரடி ஒழுங்கையுடன் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து வடகிழக்கு சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது ஆர். சிவகுருவினது காணியின் தென்னெல்லையிலுள்ள ஒழுங்கையுடன் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக அது கல்லூரி வீதியைச் சந்திக்கும் சந்தியின் மத்திவரைக்கும் ; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அது என். கந்தசாமியினது காணியின் மேற்கெல்லையிலுள்ள ஒழுங்கையைச் சந்திக்கும் சந்தியின் மத்தி வரைக்கும் ; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்திய கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

### 6 ம் வட்டாரம்—கொலனி

வடக்கு : சுண்ணாகம்-இணுவில் கிராமங்களுக்கிடையிலான பொது எல்லை பட்டின சபைப் பிரதேசத்தின் மேற்கெல்லையைச் சந்திக்கும் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக அது ஊரெழுக் கிராமத்தின் தென்னெல்லையைச் சந்திக்கும் வரைக்கும் ; அங்கிருந்து கிழக்கு நோக்கி ஊரெழுக்கிராமத்தின் தென்னெல்லை ஓரமாக 5 ம் வட்டாரத்தின் மேற்கெல்லையின் வட அந்தம் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி 5 ம் வட்டாரத்தின் மேற்கெல்லை ஓரமாக அது 4 ம் வட்டாரத்தின் வட எல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கி 4 ம் வட்டாரத்தின் வட எல்லை ஓரமாக அதன் மேற்கு அந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி பட்டினசபைப் பிரதேசத்தின் மேற்கெல்லை ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

### 7 ம் வட்டாரம்—ஊரெழு கிழக்கு

வடக்கு : யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதி விளாங்கன் ஒழுங்கையுடன் சந்திக்கும் சந்தியின் மத்தியிலிருந்து தென்கிழக்கு நோக்கி பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்கெல்லை ஓரமாக விளாங்கன் சுடலையின் தென்னெல்லையினது கிழக்கந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் மீண்டும் தெற்கு நோக்கியும் பட்டின சபைப் பிரதேசத்தின் கிழக்கெல்லை ஓரமாக 3 ம் வட்டாரத்தின் வட எல்லை வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கியும் தென்மேற்கு நோக்கியும் வடமேற்கு நோக்கியும் 3 ம் வட்டாரத்தின் வட எல்லை ஓரமாக அதன் மேற்கந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடகிழக்கு நோக்கி யாழ்ப்பாணம்-பலாலி கட்டுவேலைப் பகுதி வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

*8 ம் வட்டாரம்—ஊரெழு மேற்கு*

*வடக்கு: பட்டின சபைப் பிரதேசத்தின் வட எல்லை தொடங்கும் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையின் ஓரமாக அதன் கிழக்கு அந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினுல்;*

*கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கி பட்டினசபைப் பிரதேசத்தின் கிழக்கெல்லை ஓரமாக 7 ம் வட்டாரத்தின் மேற்கெல்லையின் வட அந்தத்துக்கும்; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வட்டாரத்தின் மேற்கெல்லை ஓரமாக 5 ம் வட்டாரத்தின் வட எல்லையின் கிழக்கு அந்தத்துக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினுல்;*

*தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வட மேற்கு நோக்கி 5 ம், 6 ம் வட்டாரங்களின் வட எல்லைகளின் ஓரமாக அது பட்டினசபைப் பிரதேசத்தின் மேற்கெல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினுல்;*

*மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடகிழக்கு நோக்கி பட்டினசபைப் பிரதேசத்தின் மேற்கெல்லை ஓரமாக வட்டாரத்தின் வட எல்லை தொடங்கும் இடத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினுல்.*

*12-555—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725*

---

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச்சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினுல் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்ருேடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21ம் ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறுபோதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப் பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்ருண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைப்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்ருேடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினுல் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினுல், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (…,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

**(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்**

க. பொ. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடை நிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில், விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

“ (மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்) ”.

குறிப்பு.—இதில் “ புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் ” என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் “ இலங்கையர் ” என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை:**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக்குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ் வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) “கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது.”

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணபபங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய**

**விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழிநுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின திகதி : ————.

(ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்.
முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் : ————.
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.
..........வருடங்கள் ........மாதங்கள் ..... நாட்கள்
(ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பக்காரர் : ————
(ஆ) அவரது பிதா : ————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம் பெண்ணா ? : ————

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ————.

| பொதுக் கல்வி | | |
|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. ........ | ........ | ........ |
| 2. ........ | ........ | ........ |
| 3. ........ | ........ | ........ |
| 4. ........ | ........ | ........ |
| 5. ........ | ........ | ........ |

| உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|
| தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. ........ | ........ | ........ |
| 2. ........ | ........ | ........ |
| 3. ........ | ........ | ........ |
| 4. ........ | ........ | ........ |
| 5. ........ | ........ | ........ |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் : ————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.
(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக சம்பள அளவுத் திட்டமும் : ————.

(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசை பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையிலலாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 550,
கொழும்பு 1.

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### பரிசோதகர் பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. வேதனம் :—ஒவ்வொரு பதவிக்கும் உரிய வேதனம் வருமாறு :—வருடாந்தம் ரூ. 1,860—17 × 120—8 × 180—5,340. வருடாந்தம் ரூ. 3420 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும், வருடாந்தம் ரூ. 4,810 பெறுமுன் வினைத்திறமை காண் தடையும் உண்டு.

3. கொழும்பு மாநகரசபையின் எந்திரிய ஓவர்சியர்களிடமிருந்தும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் மராமத்து மேற்பார்வையாளர்கள், பரிசோதகர்களிடமிருந்தும் வரும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சார்த்திகளுக்கு பின்வருபவை இருக்க வேண்டும் :—

(1) 7 வருட செய்முறை அனுபவம்; அதில் 2 வருடம் சிவில் பொறியியல் வேலைகளில் அனுபவம்; அல்லது.

(2) சிவில் பொறியியல் வேலைகளில், குறைந்தது 5 வருட செய்முறை அனுபவம்.

பின்வருபவற்றுள் ஏதாவதொரு தொழில் நுட்பத் தகைமையும் பரீட்சார்த்திகளுக்கு இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் (சிவில்)

(ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின், மாநகரப் பொறியியலில் இறுதிச் சான்றிதழ் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு)

(இ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டட நிர்மாணத்தில் இறுதிச்சான்றிதழ் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு)

(ஈ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டடக் கலையில் இறுதிச்சான்றிதழ் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தர தகைமை.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம் பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிசேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம் பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனை களுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத் திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப் படவேண்டும். 27.12.1966 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோ கத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப் பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை அல்லது மாந கரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகி யோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங் களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தா லன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1.12.1966.

12-586—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### உள்ளூர் ஆட்சிச் சேவை

**உள்ளூர் ஆட்சி மின்சார அத்தியட்சர்கள் சேவை தரம் 3 க்கு (தொழில் நுட்பத் தகைமைகள்) ஆட்சேர்ப்பு**

தரம் 3, மின்சார அத்தியட்சர் பதவிகளில் நியமனம் பெற பின்வரும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(1) திரு. எஸ். கணேசன்.
(2) திரு. எஸ். நகுலேஸ்வரன்.
(3) திரு. எம். கந்தசாமி.
(4) திரு. எம். வி. அன்ரனீட்டோ.
(5) திரு. வி. நவரத்தினராஜா.
(6) திரு. ரி. நற்குணமாணிக்கம்.

உடனடியாகவே நியமனங்கள் இவர்களுக்குக் கொடுப்ப தற்கு அதிகாரசபை கையேற்பதில்லை. உ. ஆ. சேவையில் வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் நியமனங்கள் கொடுக்கப்படும்.

கட்டளையின்படி

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹா,
காரியதரிசி.
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1,
30. 11. 1966.

12-585—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

---

## நானாவித அறிவித்தல்கள்

### ஏறாவூர் பட்டின சபை

**கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்**

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணப்படும் பெயர்வழிக்காரர்களிடமிருந்து 1967 ம் ஆண் டிற்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண் ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தப்பட்டின சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரே னும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பி - னல், மறுப்பிற்கான காரணங்களை, இவ்வர்த்தமானியில் பிர சுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.

பரீது மீராலெவ்வை,
தலைவர்,
பட்டின சபை, ஏறாவூர்.

பட்டின சபைக் காரியாலயம்,
ஏறாவூர், 25.11.66.

அட்டவணை

| விண்ணப்பத்தாரர்களின் பெயர், விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர், விலாசம் |
|---|---|
| 1. மு. வெள்ளைத்தம்பி, 3 ம் குறிச்சி, ஏறாவூர். | 1 ம் இலக்கக்கடை, பள்ளி வாசல் சந்தை, ஏறாவூர். |
| 2. மு. உமறுலெவ்வை, 3 ம் குறிச்சி, ஏறாவூர். | 2 ம் இலக்கக்கடை, பள்ளி வாசல் சந்தை, ஏறாவூர். |
| 3. சி. செய்யது இப்ருகிம், 3 ம் குறிச்சி, ஏறாவூர். | 3 ம் இலக்கக்கடை, பள்ளி வாசல் சந்தை, ஏறாவூர். |
| 4. உ. முகமதுகாசிம், 3 ம் குறிச்சி, ஏறாவூர். | 4 ம் இலக்கக்கடை, பள்ளி வாசல் சந்தை, ஏறாவூர். |
| 5. ம. மீராசாகிபு, காட்டுப் பள்ளி வீதி, ஏறாவூர். | 5 ம் இலக்கக்கடை, பள்ளி வாசல் சந்தை, ஏறாவூர். |
| 6. ஏச். எம். ஏச். லத்தீப், 5 ம் குறிச்சி, ஏறாவூர். | 260. ஏ, திருமலைவீதி, 4 ம் குறிச்சி, ஏறாவூர். |
| 7. எஸ். எம். முகைதீன் அப் துல்காதர், 1 ம் குறிச்சி ஏறாவூர். | பள்ளிவாசல் சந்தை, ஏறாவூர். |
| 8. மு. நைனாமுகமது, 3 ம் குறிச்சி, ஏறாவூர். | 1 ம் இலக்கக்கடை, புதிய சந்தை, ஏறாவூர். |

12-565/1—9.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,725

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்**

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

*வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது*

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுபபிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 36 | 00 | .. | 49 | 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 26 | 00 | .. | 31 | 50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 33 | 50 | .. | 41 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை சதம் | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 40 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 80 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 20 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 40 | .. | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.